# POLITICAL SERVICES OF THE PARLIAMENTARIAN S.M.RASAMANICKAM: A HISTORICAL VIEW

## பாராளுமன்ற உறுப்பினர் சி.மூ.இராசமாணிக்கத்தின் அரசியற் பணிகள்: வரலாற்றுப்பார்வை

Ms. Paul Jesukumar Chrisdina Nirojini[1]
Temporary Assistant Lecturer, Deartment of History, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
Corresponding author's e-mail: nirojinic@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

மூன்று காலகட்டங்களில் மொத்தமாகப் பதினான்கு வருடங்கள் பட்டிருப்புத்தொகுதியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் இருபத்திரெண்டு வருட காலம் முழுநேர அரசியல்வாதியாகச் செயற்பட்டு அத்தொகுதி மக்களால் மட்டுமல்லாது, முழு ஈழத்தமிழர்களினாலும் அதிகமாக நேசிக்கப்பட்டவர். அரசியலில் முழுமையாகத் தன்னை அர்ப்பணித்து அவர் சேவையாற்றியவர்களுள் முக்கியமானவராகத் திகழ்கின்றார். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அஹிம்சைப் பாதையில் அவரின் பிரதான தளபதிகளில் முன்னணியில் விளங்கிய சி.மூ.இராசமாணிக்கத்தின் அரசியற் பணிகளை நோக்குவது இவ்வாய்வின் முக்கியத்துவமாகும்.

பேரினவாதிகளால் சிறுபான்மை மக்கள் நசுக்கப்பட்டவேளையில் அரசியல் அனாதைகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிராக குரல்கொடுத்த கிழக்கு மாகாணத் தமிழ்த் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் ஆவணப்படுத்தப்படவில்லை. அவ்வரிசையில் பட்டிருப்புத் தொகுதியின் முதன்மை வேட்பாளரான சி.மூ.இராசமாணிக்கம் முக்கியத்துவம் பெறுகின்றார்.

இவருடைய அரசியற் பணிகளை நோக்கும் போது: திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் இவரால் துறைநீலாவணை, தாந்தாமலை, மட்டக்களப்பு, 35, 37, 39, 40 ஆம் கிராமங்களில் தடுக்கப்பட்டன. இலங்கை அரசுகளினால் காலத்திற்குக் காலம் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தை நடைமுறைப்படுத்த எடுத்த முயற்சிகள் இவரால் தடுக்கப்பட்டன. இதற்காக பாத யாத்திரைகள், சத்தியாக்கிரக போராட்டங்கள், மாபெரும் பொதுக் கூட்டங்கள் இவரது தலைமையில் மட்டக்களப்புப் பகுதிகளில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் வீட்டுக்காவல், சிறைவாசத்தை அனுபவிக்க வேண்டியேற்பட்டது. மட்டக்களப்பு மக்களிடம் காணப்பட்ட தீண்டாமைக்கு எதிராகச் செயற்பட்டார். தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் தமிழ், முஸ்லீம் மக்களை அரசியலில் ஒன்றிணையச் செய்தார்.

இவரது அரசியற் பணிகளினூடாக இனவாதப்போக்கில் செயற்பட்ட பேரினவாதிகளை கட்டுப்படுத்திய வழிமுறைகளை அறிவது அவசியமாகின்றது. இவர் அரசியலினூடாக சமூகத்துக்காற்றிய பணிகளையும் அறிந்துகொள்ளுவது இந்த ஆய்வின் முக்கிய விடயங்களுள் ஒன்றாயுள்ளது.

அருஞ்சொற்பதங்கள்: சி.மூ.இராசமாணிக்கம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், அரசியல், தமிழரசுக்கட்சி, மாநாடு

### 1.1 ஆய்வு அறிமுகம்

இலங்கையை ஒரு குடையின்கீழ் ஆட்சிசெய்த பிரித்தானியர் பிரித்தாளும் கொள்கையை கடைப்பிடித்து தமது ஆட்சியை தக்கவைத்துக் கொண்டனர். இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து இக்கொள்கையை பெரும்பான்மை மக்கள் பின்பற்றினர். இதன் காரணமாக இலங்கையில் இனமுரண்பாடு வலுப்பெற்றுக் கொண்டது.

இப்பின்னணியில் இருபதாம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் தோன்றிய அரசியல்வாதிகளுள் சி.மூ.இராசமாணிக்கம் முக்கியமான ஒருவராகத் திகழ்கின்றார். தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துடன் இணைந்த வகையில் இவரால் அரசியல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.
எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அஹிம்சைப் பாதையில் அவரின் பிரதான தளபதிகளில் முன்னணியில் விளங்கிய சி.மூ.இராசமாணிக்கத்தின் அரசியற் பணிகளை நோக்குவது இவ்வாய்வின் முக்கியத்துவமாகும்.

பேரினவாதிகளால் சிறுபான்மை மக்கள் நசுக்கப்பட்டவேளையில் அரசியல் அனாதைகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிராக குரல்கொடுத்த கிழக்கு மாகாணத் தமிழ்த் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் ஆவணப்படுத்தப்படவில்லை. அவ்வரிசையில் பட்டிருப்புத் தொகுதியின் முதன்மை வேட்பாளரான சி.மூ.இராசமாணிக்கம் முக்கியத்துவம் பெறுகின்றார்.

இவரது அரசியற் பணிகளினூடாக இனவாதப்போக்கில் செயற்பட்ட பேரினவாதிகளை கட்டுப்படுத்திய வழிமுறைகளை அறிவது அவசியமாகின்றது. இவர் அரசியலினூடாக சமூகத்துக்காற்றிய பணிகளையும் அறிந்துகொள்ளுவது இந்த ஆய்வின் முக்கிய விடயங்களுள் ஒன்றாயுள்ளது.

## 1.2 ஆய்வின் நோக்கம்

சி.மூ.இராசமாணிக்கத்தின் அரசியற் பணிகளை நோக்கலும், அவர் தொடர்பான பணிகளில் ஆழமாக பதிவு செய்யப்படாத விடயங்களை ஆவணப்படுத்தலும் இவ்வாய்வின் நோக்கமாகும். ஈழத் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி அவர்களின் நியாயமான உரிமைகளை வழங்க மறுத்து அட்டூழியச் செயல்களில் ஈடுபட்ட பேரினவாத அரசுக்கு எதிராக சி.மூ.இராசமாணிக்கத்தின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

சி.மூ.இராசமாணிக்கத்தின் அரசியற்பணிகள் தொடர்பான முதலாவது ஆய்வாக இது அமைவதனால் பிற்காலங்களில் இவரைப்பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள இது உதவியாக அமையும் எனக்கருதியும் இம்முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.3 ஆய்வுப்பிரச்சனை

பேரினவாதிகளால் சிறுபான்மை மக்கள் நசுக்கப்பட்டவேளையில் அரசியல் அனாதைகளாக்கப்பட்ட தமிழர்களுக்கு எதிராக குரல்கொடுத்த கிழக்கு மாகாணத் தமிழ்த் தலைவர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இதுவரை கிழக்கு மாகாணத்தில் ஆவணப்படுத்தப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் அரசியற்பணி வரலாற்றை தொடர்ச்சியான முறையில் தொகுக்காவிட்டால் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் வரலாற்று மரபை பிற்காலச் சந்ததியினர் அறிந்துகொள்ளமுடியாது போய்விடும். மட்டக்களப்பு வாழ் மக்களிடையே அரசியல் வரலாற்றைப் பேணும் மரபும், அதனை நெறிப்படுத்தும் சிந்தனையும் காணப்படாமை ஆய்வுக்குரிய பிரச்சினையாக அமைகின்றது.

## 1.4 ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு முறையானது வரலாற்றடிப்படையில் பகுப்பாய்வாக அமைந்துள்ளது.

## 1.5 தரவு சேகரிப்பு

முதல்நிலைத் தரவுகளாக நூல்களுக்கு வழங்கப்பட்ட வாழ்த்துரைச்செய்தி, இரங்கலுரைச் செய்திகள், தமிழரசுக் கட்சியின் மாநாடு மற்றும் பாராளுமன்ற உரைகளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக இராசமாணிக்கம் பற்றி நூல்களில் வெளியான ஏனைய நூல்கள், கட்டுரைகள், நினைவு மலர்கள், பத்திரிகைச் செய்திகள், இணையத்தள தகவல்களை இரண்டாம்நிலைத் தரவுகளாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## 1.6 இலக்கிய மீளாய்வு

சபாரெத்தினம்.ரி., 2006, **தந்தை செல்வா : அரசியல் வாழ்க்கைச் சரிதை** எனும் நூலில் தமிழரசுக்கட்சியின் உருவாக்கம், செயற்பாடுகள், மாநிலமாநாட்டுத்

தகவல்களும், இனமுரண்பாட்டுப் பின்னணி, தந்தை செல்வாவின் அரசியல் சிந்தனைகள் போன்ற தகவல்களும் உள்ளன. இந்நூல் காலிமுகத்திடல் சத்தியாக்கிரகம் தொடக்கம் தனிநாட்டுத் தீர்மானம் வரையான பல பகுதிகளையும் தொட்டுச் செல்கின்றது. இந்நூலானது அதிகம் செல்வாவின் பலங்களைத் தொட்டுச் செல்லும் அதேநேரம் பலவீனங்களைப் பெருமளவு தவிர்த்துச் செல்கிறது.

சிற்றம்பலம்.சி., 2015, **தடம் பதித்த தமிழ்த் தேசியம்** எனும் நூலில் மாநிலமாநாட்டுத் தகவல்களும், இன முரண்பாட்டுப் பின்னணி, தமிழரசுக்கட்சி போன்ற விடயங்கள் காணப்படுகின்றன.

**நூற்றாண்டு மலர்க்குழு,** 2013, **இராசமாணிக்கம் (இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னால் தலைவரும், பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்)** எனும் நூல் நூற்றாண்டு நினைவு மலராக வெளியிடப்பட்டது. சி.மூ.இராசமாணிக்கம் பற்றி பல்வேறு நபர்களின் சிந்தனைகளை தத்தம் பார்வையில் எடுத்துக்காட்டியுள்ளனர்.

**இலங்கை தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலர்** (1974) என்ற நூலில் தமிழரசுக்கட்சியின் தேசிய மாநாடுகள், யாழ் சிறப்பு மாநாடு என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

## 2. மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சி

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து விலகி 1949.12.08 ஆம் திகதி தமிழரசுக்கட்சியை உருவாக்கினார்.[1] இது சமஷ்டிக்கட்சி என்றும் அழைக்கப்பட்டது. இக்கட்சி தமிழர்கள் மத்தியில் தேசியத்துவ அம்சங்களுக்கான ஓர் அமைப்பாக விளங்கியது. இலங்கை முழுவதும் தமிழரசுக்கட்சியின் ஆரம்பமும் வளர்ச்சியும் எதிர்ப்பின் முன்னணியில் வளர்த்தெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண மக்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் எதிராக கிழக்கிலங்கை மக்களின் எண்ணங்களும், அரசியல் சிந்தனைகளும் வேரூன்றியிருந்தது. அதாவது மட்டக்களப்பு - யாழ்ப்பாணத் துவேசத்துக்கு தூபமிட்ட காலம். தமிழரசுக்கட்சியின் கருத்துக்களை பரப்புவதில் பெருந்தடைகள் நிலவின. தமிழரசுக்கட்சியின் வெள்ளிவிழா நிகழ்வின் போது ‘‘கிழக்கில் கட்சி வளர்ந்த கதை’’ என்ற தலைப்பில் செ.இராசதுரை நிகழ்த்திய உரையின் மூலம் அதனை அறிந்துகொள்ளமுடிகின்றது.[2]

### 2.1 பட்டிருப்புத் தொகுதியில் தமிழரசுக்கட்சி

பட்டிருப்புத் தொகுதியில் 1952 ஆம் ஆண்டுவரை எவ்வித அரசியற் கட்சிகளும் தேர்தலில் ஈடுபடவில்லை. மாறாக சுயேச்சைக்கட்சியில் போட்டியிட்ட நிலையில் வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதில் சாதியமைப்பு செல்வாக்குச் செலுத்தியது. தமிழ் நாட்டில் தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரிச்சுவட்டை பின்பற்றி பெரியபோரதீவில் வாழ்ந்த இளைஞர்கள் ஒன்றுகூடி பூ.ம.செல்லத்துரை தலைமையில் பகுத்தறிவு இயக்கத்தை ஆரம்பித்தனர். பகுத்தறிவு இயக்கமானது பட்டிருப்புத் தொகுதியில் சமூக, சமய, அரசியற் பணிகளை மேற்கொண்டது. இப்பகுத்தறிவு இயக்கமே 1953 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பட்டிருப்புத்தொகுதியின் தமிழரசுக்கட்சியாக மாற்றமடைந்தது.

தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை பரப்புவதில் பட்டிருப்புத்தொகுதியின் பெரியபோரதீவுக்கிளை மும்முரமாக ஈடுபட்டது. பழுகாமம், கொக்கட்டிச்சோலை, குருக்கள்மடம், களுதாவளை, கல்லாறு, துறைநீலாவணை ஆகிய இடங்களில் தமிழரசுக்கட்சியின் கிளைகள் உருவாக்கம் பெற்று அரசியல் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டமை சிறப்பாகும். பட்டிருப்புத் தொகுதியின் தமிழரசுக்கட்சியின் கிளைகள் ஒன்றிணைந்து 1955 ஆம் ஆண்டு தாயகம் என்ற மாத இதழை வெளியிட்டது. மேலும் நேர்வழி, தேநாடு, சமநீதி போன்ற பத்திரிகைகளையும், தமிழனே கேள், தாந்தாவும் தமிழர்களும், ஈழத்தமிழர்களின் பூர்வீக வரலாறு, இனப்பிரச்சினைத் தீர்வுகள் என்ற புத்தகங்களையும் வெளியிட்டன.

## 3. சி.மூ.இராசமாணிக்கத்தின் அரசியற் பணிகள்.

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் இவரால் தடுக்கப்பட்டன. விவசாய அபிவிருத்தியென்ற பெயரில் தமிழர் தாயகப் பூமியில் சிங்களக் குடியேற்றத்தை பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா ஆரம்பித்து வைத்தார். கிழக்கில் முதலாவது திட்டமாக கல்லோயாத்திட்டம் அறிமுகமானது. 40 குடியேற்றத்தில் 6 குடியேற்றம் தமிழருக்காக ஒதுக்கப்பட்டபோதிலும் 1956.07.05 இல் வெடித்த இனக்கலவரத்தின் போது அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டனர்.[3] கல்லோயாவில் ஓய்வுபெற்ற இராணுவத்தினரை குடியேற்றி சிங்கள குடியேற்றத்தை விஸ்தரிக்கும் செயற்பாட்டில் அரசு இறங்கியது. சி.மூ.இராசமாணிக்கம் இதனைக் கடுமையாக எதிர்த்தார். உதவிக்காணி ஆணையாளராக இருந்து தான் பெற்றிருந்த சட்ட நுணுக்கங்களையெல்லாம் கையாண்டு அரசிற்கு எதிராகச் செயற்பட்டார்.[4] கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கடைசி எல்லையாக பட்டிருப்புத்தொகுதி அமைந்தது. 35, 37, 39, 40 ஆம் போன்ற குடியேற்றக்கிராமங்களில் அமைக்கப்பட்ட வீடுகளில் குடியமர்த்தப்பட்ட அம்மக்களை அந்த மண்ணின் நிரந்தர உரிமையாக்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வெற்றிகண்டார். கல்லோத்திட்டப் பணியில் துறைநீலாவனையைத் தாக்க சிங்கள காடையர்கள் முயன்ற போது அதனைத் தடுத்து நிறுத்தினார்.[5]

தாந்தாமலையானது ‘‘பௌத்த சமயத்தின் புனிதபூமி’’ என அரசு நடைமுறைப்படுத்தியபோது அதனைத் தடுத்து நிறுத்தி வரலாற்று ஆதாரங்களை முதன்மைப்படுத்தி ‘‘தாந்தாவும் தமிழர்களும்’’ எனும் நூல் இவரது தலைமையில் எழுதப்பட்டது. தாந்தாமலைப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க கொழும்பு சென்று பிரதமர் பண்டாரநாயக்காவைச் சந்தித்து தாந்தாமலைப் பிரதேசத்தின் வரலாற்றை எடுத்துக்கூறினார். ஆறாம் பராக்கிரமபாகு இந்த நாட்டை ஆளும்போது தென்னிந்தியாவிலிருந்து சோழ படையெடுப்பு இடம்பெற்றது. அப்படையெடுப்பின் பயத்தால் சில பிக்குகளும் பிக்குனிகளும் கிழக்குநோக்கி வந்து அடர்ந்த காடுகளிலும் மலையோரங்களிலும் வாழ்ந்து சில காலங்களில் திரும்பிச் சென்றுவிட்டார்கள் எனக்கூறி தாந்தாமலைக்கு வந்த பேராபத்தை தடுத்து நிறுத்தி தாந்தாமலைப் பிரதேசம் ‘‘இந்துக்களின் புனித பிரதேசம்’’ என்பதை உறுதிப்படுத்தினார்.[6]

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தை ஒட்டிய பகுதியில் யாரும் அறியாத வகையில் சிங்களவர்களைக் குடியமர்த்திய போது தமிழர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதுபற்றி அரசாங்க அதிபருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் குடியேறிய சிங்களவரை வெளியேற்றுவதென்றும் அதே இடத்தில் தமிழர்களை குடியமர்த்துவதென்றும் முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி சிங்களவர் அகற்றப்பட்டு அப்பகுதி ‘‘இராசதுரைபுரம்’’ என அழைக்கப்பட்டது.[7]

பண்டாரநாயக்கா காலத் தனிச்சிங்கள சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகள் இவரால் முன்னெடுக்கப்பட்டன. 1956.06.05 ஆம் திகதி சிங்களம் மட்டும் என்ற அரச மொழிச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார்.[8]

தனிச்சிங்கள சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே மொழிப்பிரச்சனை பற்றிய மாபெரும் பொதுக்கூட்டம் தேற்றாத்தீவு இளைஞர் இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டது. எஸ்.எம்.இராசமாணிக்கம் முன்னோடியாக செயற்பட்டார். ‘‘மொழி –நாட்டின் விழி!, இனம் - நாட்டின் உயிர்!, நாடு – நமது பிறப்பிடம்!’’ என்ற கருப்பொருளில் மாநாட்டு உரைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. தேற்றாத்தீவு சனசமூக நிலைய மைதானத்தில் 20.01.1956 இல் இடம்பெற்ற கூட்டத்தில் முக்கிய பேச்சாளர்களாக எஸ்.எம்.இராசமாணிக்கம், என்.ஆர்.இராஜவரோதயம், எஸ்.இராசதுரை, எம்.எஸ்.காரியப்பர், ஆர்.டபிள்யூ.அரியநாயகம், எம்.எஸ்.கமீது, க.கந்தசாமி என்போர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.[9] ஒற்றுமைக்கான குரலை மக்களிடம் வேண்டுவதாக இம்மாநாடு அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களின் எதிர்ப்பைக் காட்டுவதற்காக 1956.08.01 ஆம் திகதி திருமலை நோக்கிய பாத யாத்திரை நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம், வவுனியா, மூதூர், மட்டக்களப்பு, பொத்துவிலிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரையாளர்கள் திருகோணமலையை 1956.08.16 வந்தடைந்தனர்.[10]

பொத்துவிலிலிருந்து மட்டக்களப்பு நகர் ஊடாக திருகோணமலை சென்ற கால்நடை யாத்திரைக்கு இராசமாணிக்கம் தலைமை தாங்கியமை குறிப்பிடத்தக்கது. 1956.08.18 இராஜவரோதயம் பாராளுமன்றப் பிரதிநிதி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சி.மூ.இராசமாணிக்கம் ''விவசாயத்தில் பொருளாதாரம்'' என்ற தலைப்பில் 45 நிமிடங்கள் உரையாற்றினார்.[11]

பண்டா - செல்வா உடன்படிக்கை 1957 யூலை கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கையில் இராசமாணிக்கம் முக்கிய தலைவர்களில் ஒருவராகக் கலந்துகொண்டார்.
எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்கா காலத்தில் ஸ்ரீ எழுத்துப் பொறித்த வாகனங்கள் ஓடத் தொடங்கவே யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் ஆரம்பித்தது. கிழக்கிலும் இப்போராட்டத்தை சி.மூ.இராசமாணிக்கம் முன்னெடுத்தார். இதனால் நான்கு மாதம் தடுப்புக் காவலில் மட்டக்களப்பு சிறையில் சிறைவாசம் அனுபவித்தார். ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சுதந்திர தினத்தன்று (1957.02.04) கடையடைப்புச் செயற்பாட்டில் இராசமாணிக்கம் இறங்கினார். பாராளுமன்ற பிரதிநிதியாக இல்லாத போதிலும் 1958 ஆம் ஆண்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

தீண்டாமையானது மக்களின் ஒன்றிணைவுக்குத் தடையாக அமைந்தது. எஸ்.எம்.இராசமாணிக்கம் தலைமை தாங்கிய தமிழரசுக்கட்சியின் மாநாடுகளிலும் சுட்டிக்காட்டப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேநீர்க்கடை விருந்து நிகழ்வுக்கு ஒப்பாக மட்டக்களப்பில் செ.இராசதுரை தலைமையில் வாழை இலை உணவுப்பரிமாற்றம் இடம்பெற்றுக்கொண்டது. சமபந்தி போஜனத்தில் செ.இராசதுரை, எஸ்.எம்.இராசமாணிக்கம், என்.ஆர்.இராஜவரோதயம், அ.அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களும் தீண்டத்தகாதவர்கள் எனக் கருதப்பட்டவர்களும் கலந்துகொண்டனர்.

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா காலத்தில் முழு நாட்டிற்குமான சிங்கள சட்டத்திற்கு எதிரான நடவடிக்கைகளும் இவரால் மேற்கொள்ளப்பட்டன. 1961.02.02 ஆம் திகதி யாழ் கச்சேரிக்கு முன்பாக நடைபெற்ற போராட்டத்தில் சத்தியாக்கிரகிகள், தொண்டர்கள் தாக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் பொலிசார் நடத்திய தாக்குதலுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வகையில் 1961.02.27 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டமெங்கும் ஹர்த்தால் நடைபெற்றது. அடுத்தநாள் மட்டக்களப்பு கச்சேரியிலும் தொண்டர்கள் சத்தியாக்கிரகத்தை நடாத்தினர்.[12] பட்டிருப்புத்தொகுதி மக்கள் இராசமாணிக்கம் தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றினர்.

தமிழரசுக்கட்சிக்கும் ஸ்ரீமா அரசாங்கதத்திற்குமிடையில் செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சி.மூ.இராசமாணிக்கம் கலந்துகொண்டார்.[13] பேச்சுவார்த்தைகள் பலனின்றி தமிழரசுக்கட்சியினால் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக இயக்கம் மக்கள் போராட்டமாக வளர்ச்சி கண்டது. சட்டமறுப்பு போராட்டத்தின் அங்கமாக 1961.04.14 ஆம் திகதி தமிழ் பிரதேசங்களில் தமிழரசு தபால்சேவை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

நில அபிவிருத்தி கட்டளைச் சட்டமானது முடிக்குரிய காணிகளை கொடையாகவும், குத்தகையாகவும் பகிர்ந்தளிப்பதை மையமாகக்கொண்டது. தமிழரசின் காணிக்கச்சேரி தமிழ் மக்கள் காணிகோரி விண்ணப்பிக்கத்தயாராக இருக்கிறார்கள் என்பதையும் அரசாங்கம் பொய் கூறுகின்றது என்பதையும் உலகிற்கு எடுத்துக்காட்டியது.[14] கிழக்கில் பேமிற் அடிப்படையில் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்ட காரணமாய் அமைந்தார்.

1961.04.17 இல் இலங்கை முழுவதும் அவசரகால சட்டத்தை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசு பிரகடனப்படுத்தியது. அன்றிரவு தலைவர்களையும் முக்கிய கட்சித் தொண்டர்களையும் கைதுசெய்து பனாகொடை இராணுவமுகாமில் தடுத்து வைத்தனர். இவர்களுள் இராசமாணிக்கமும் ஒருவர்.[15] ஆறு மாத சிறைவாசத்தின் பின்னர் 1961.10.04 ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

1964.01.01 ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை தீவிரமாகச் செயற்படுத்தப்போவதாக ஸ்ரீமா அரசு அறிவித்தது. அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் முகமாக 1963.06.30 இல் கூடிய தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்களின் முழுச்சக்தியையும் ஒன்றுதிரட்டி எதிர்ப்பதென்று தீர்மானித்தது. 1964.01.01 இல் மட்டக்களப்புக் கச்சேரிக்கு முன்பாக கட்சித் தலைவர்கள் தலைமையில் கண்டன ஊர்வலங்கள் நடாத்தப்பட்டன. இராசமாணிக்கமும் இதில் முக்கிய பங்காளராகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.[16]

டட்லி சேனநாயக்கா, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இணைந்து 1965.03.24 இல் ஒப்பந்தம் செய்து சமரசமுடிவைப் பெற்றுக்கொண்டனர்.[17] அரசாங்கத்துடன் மாவட்டசபைகள் பற்றி பேசுவதற்காக 5 உறுப்பினர்களைக் கொண்டகுழுவொன்றை தமிழரசுக்கட்சி தெரிவுசெய்தது. எஸ்.ஜே.வி.செல்வநாயகம், நாகநாதன், திருச்செல்வம், இராசமாணிக்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் அதன் உறுப்பினர்களாவர்.

1972.05.22 ஆம் திகதி புதிய அரசியலமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இலங்கை குடியரசுதின விழா வடக்கு, கிழக்கு மாகாணங்களில் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. அரசியலமைப்பு பிரதிகள் தீயில் இடப்பட்டன. மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரித்தனர். கடைகள் மூடப்பட்டன. பேரூந்து போக்குவரத்தும் இடம்பெறவில்லை. இவையாவும் மட்டக்களப்பு பகுதிகளில் இராசமாணிக்கம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.[18] இராசமாணிக்கம் தலைமையில் மட்டக்களப்பில் 1972.06.05 ஆம் திகதி பொதுக்கூட்டமும் நடாத்தப்பட்டது.[19]

குடியரசு யாப்புக்கு எதிரான வன்முறையைத் தொடர்ந்து, அரசினால் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன்மூலம் 70 பேருக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களை விடுதலை செய்யக்கோரி இராசமாணிக்கம் தலைமையில் உண்ணாவிரத போராட்டம், ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. 1973 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமைச்சர் குமாரசூரியர் மட்டக்களப்புக்கு வருகைதந்த போது இராசமாணிக்கம் தலைமையில் கறுப்புக்கொடி காட்டப்பட்டது.[20]

### 3.1 தமிழரசுக்கட்சியின் மாநாடுகள்

சி.மூ.இராசமாணிக்கம் இலங்கை தமிழரசுக்கட்சியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலத்தில் கட்சியின் மூன்று மாநாடுகளுக்கு தலைமை தாங்கும் பொறுப்பு மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக இவருக்கு முதன்முதலில் கிடைத்தமை சிறப்பாகும். கட்சியின் நான்காவது தலைவராகவும் செயற்பட்டார். கட்சியின் ஏழாவது, எட்டாவது, பதினொராவது மாநாடுகளுக்கு இவர் தலைமை தாங்கினார். இவருடைய மாநாட்டு அறிக்கைகள் மூலமாக சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், மலையக மக்களின் இன்னல்கள், தமிழ் மொழியுரிமை மறுக்கப்பட்டமை, இனவொழிப்பு நடவடிக்கைகள் புலப்படுகின்றமை, அரச ஊழியர்களுக்கான சலுகை குறைப்பு, தீண்டாமை ஒழிப்பு, அஹிம்சைப் போராட்டத்தில் மக்கள் ஈடுபட வேண்டும், பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டும், தேசிய மய சேவைகள் சிங்கள மயமாக மாற்றம் பெற்றுள்ளமை, மட்டக்களப்பு மக்களுக்குரிய அபிவிருத்தித் துறைகள், சமஷ்டி ஆட்சியே இந்நாட்டின் சுபீட்சத்திற்கான ஒரேவழி கருத்திலமைந்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கட்சியின் ஏழாவது மாநாட்டின் போது சுதந்திர இலங்கையை ஆண்டுவரும் அரசுகளின் திட்டமிட்ட இனவொழிப்பு நடவடிக்கைகளினால் தமிழ் பேசும்

இனத்தின் வாழ்வு சீரழிந்து விட்டமையை விளக்கங்களோடு எடுத்துக்காட்டுகின்றார். தேசிய அரசை இனியும் ஆதரித்தால் தமிழ்பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையையும் செய்ய முடியாதெனக்கருதி இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற செயற்குழு இனிச் சுதந்திரமாக இயங்குமொரு எதிர்க்கட்சியாக செயற்பட வேண்டும் என்ற தீர்மானம் பதினொராவது மாநில மாநாட்டின்போது எடுக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பணியாற்றும் தமிழ் பேசும் மலையக மக்களை சொந்த மண்ணிலே சந்தேகப் பிரஜைகளாக மாற்றிவிட்டதென ஏழாவது, எட்டாவது மாநாடுகளில் எடுத்துரைக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் ஏனைய மக்களுடனும் மொழியுடனும் சமஅந்தஸ்து வழங்குவோம் என்று கூறிய வாக்குறுதியை நடைமுறைப்படுத்தாமை ஏழாவது, எட்டாவது, பதினொராவது மாநாடுகளில் எடுத்துக்காட்டப்பட்டது. 1961.01.01 சிங்களம் மாத்திரம் என்ற சட்டம் இயங்க ஆரம்பித்தமையால் தமிழ் பகுதிகளில் குறிப்பாக அரசபணிமனை, நீதிமன்றங்களில் சிங்களம் திணிக்கப்படுகின்றது. சிறுபான்மையோரின் மொழியுரிமையை துச்சமாக மதித்து தமிழ்மொழிப் பாடசாலைகளிலும் சிங்களமொழி திணிக்கப்படுவது ஏழாவது மாநாட்டில் எடுத்துக்காட்டப்பட்டது. சிங்கள அரசு மேற்கொண்ட நிர்வாகச் சட்டமியற்றல் நடவடிக்கை தமிழ் பேசும் இனத்தை அடியோடு நிர்மூலமாக்குவதை நோக்காகக் கொண்டது. இது 1958 இனக்கலவரத்தின் மூலமாக வெளிப்பட்டமையை ஏழாவது மாநாடு எடுத்துக்காட்டுகின்றது.

தமிழ் பேசும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஆக்கபூர்வமாகக் கிடைக்க வேண்டிய சம்பள உயர்வுகளை நிறுத்தியும், பதவியுயர்வை மறுத்தும், வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்று பயமுறுத்தியும் அரசாங்கம் மேற்கொள்ளும் நியாயமற்ற நடவடிக்கைகள் எட்டாவது மாநாட்டில் எடுத்துக்காட்டப்பட்டது.

தீண்டாமை ஒழிப்புக்கென சகல பொது இடங்களையும் அனைவருக்கும் திறந்து விடும்படி ஏழாவது மாநாடு மக்களைக் கேட்டுக் கொண்டது. இரத்தச் சகோதரர்களில் ஒரு பகுதியினருக்கு சாதியின் பெயரால் இழைக்கப்பட்ட கொடுமைகளை முற்றாக ஒழிக்க கட்சி உறுதிபூண்டு, அதற்கென முயற்சியெடுக்குமென எட்டாவது மாநாட்டில் தீர்மானமெடுக்கப்பட்டது.

தமிழ் பேசும் மக்களின் தேசிய கௌரவத்தை நிலைநாட்டவும், சுதந்திரத்தை மீட்கவும் அஹிம்சை ரீதியான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். நாட்டின் விடுதலைக்காக உழைத்த ஐரிஸ் தேசபக்தன் ரெறன்ஸ் மக்ஸ்வினி கூறிய வார்த்தைகளை ஏழாவது மாநாட்டில் ஞாபகப்படுத்தினார். ‘‘இப்போராட்டம் தாங்கிக் கொள்ளும் சக்தியில் தங்கியிருக்கிறது. கூடிய துன்பம் விளைவிப்பவர்களல்ல. கூடிய துன்பத்தைத் தாங்குபவர்களே இறுதியில் வெற்றி பெறுவர்’’ என்பதை நினைவூட்டினார்.

தமிழ் பேசும் மக்களினதும், அவர்களது பிரதேசத்தினதும் மீட்சி தமிழ் பேசும் மக்களது சொந்த ஒருமித்த கட்டுப்பாடான முயற்சியிலும், அவர்களின் கைகளிலும், தியாகத்திலும் தங்கியுள்ளதென எட்டாவது மாநாடு கருத்துரைக்கின்றது. மக்கள் இதற்கு கட்டுப்பட்டு ஆதரவை அளிக்கத் தயாராகுமாறு பதினொராவது மாநில மாநாடு வேண்டுகோள் விடுத்தது.

பொருளாதார வளர்ச்சிக்கு ஒவ்வொரு தமிழ் பேசும் மகனும் தன்னை அர்ப்பணஞ்செய்து உழைத்திட வேண்டுமென ஏழாவது மாநாட்டுத் தீர்மானம் குறிப்பிடுகின்றது. அதற்கான திட்டங்களை செயற்படுத்த ‘‘தமிழ் பேசும் பகுதிகளில் பொருளாதார விவகாரக்குழு’’ என ஓர் குழுவை நிறுவ இம்மாநாடு தீர்மானமெடுத்தது. பொருளாதார திட்டங்களையும் வகுத்துக் கொண்டது.

கல்வித்திட்டமானது அரசாங்க உத்தியோகத்திற்கு ஆசைப்படும் கோலத்தைக் கொண்டு உருவாக்கப்பட்டது. அரச உத்தியோகம் கிடைக்கும் சந்தர்ப்பமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றினூடாக வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருகின்றமையால் படித்த தமிழ் வாலிபர்கள் பாதிப்புறுகின்றனர். இதனால்

வாலிபர்களுக்கென ஒரு தேசியத் தொழில், தொழிற்புரட்சி இயக்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென செயற்குழுவை எட்டாவது மாநாடு வேண்டியது.

1972 இல் நடைபெற்ற சிறப்பு மாநாட்டின்போது தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டது. சிங்களமொழிக்கு வழங்கப்படும் அதே அந்தஸ்து தமிழ் மொழிக்கும் சட்டபூர்வமாக அளிக்கப்பட வேண்டும், இந்நாட்டு அரசாங்கம் மதச் சார்பற்றதாக பிரகடனம் செய்யப்பட வேண்டும், இந்நாட்டை தாயகமாகக் கொண்டிருக்கும் தமிழ் மக்களெல்லோரதும் முழுமையான குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும், தமிழ் தேசிய இனத்தின் சுயாட்சியுரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பன சுட்டிக்காட்டப்பட்டன.

### 3.2 ஹன்சாட் அறிக்கைகள்

சி.மூ.இராசமாணிக்கத்தின் ஹன்சாட் அறிக்கைகள் மூலமாக தேசியமய சேவைகள் சிங்கள மயமாக மாற்றம் பெற்றுள்ளமை, சமஷ்டி ஆட்சியே இந்நாட்டின் சுபீட்சத்திற்கான ஒரேவழி, மட்டக்களப்பு மக்களுக்குரிய அபிவிருத்தித் துறைகள் என்பன வெளிக்காட்டப்பட்டுள்ளன. தேசியமயமாக்கல் கொள்கையை உபயோகித்து சிங்களம் மட்டும் கொள்கையை எங்கள் மீது திணிக்க முயன்றால் எதிர்ப்பினைக் காட்ட தயங்க மாட்டோம் எனக் குறிப்பிட்டார்

1958 இல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து 90 நாட்களில் மட்டக்களப்பிலே ஆகாய விமான நிலையத்தை அரசு கட்டிமுடித்தது. கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பேசும் மக்களை இராணுவம், பொலிஸ் கொண்டு அடக்குவதை நோக்காகக்கொண்டு அமைக்கப்பட்டது. ஆனாலும் கொழும்பு, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என்பவற்றுக்கிடையில் சங்கிலி அமைப்பில் தொடராக விமான சேவை நடைபெற்றது. வாரத்தில் ஒருதடவை விமானசேவை இடம்பெறும் அநுராதபுர விமான நிலையத்திலுள்ள வசதிகள் கூட வாரத்திற்கு மூன்று தடவை விமான சேவை இடம்பெறும் மட்டக்களப்பிற்கு அரசு வழங்காமையை சுட்டிக்காட்டுகின்றார். இலங்கை விமான நிர்வாகத்தினர் தங்களுடைய நடவடிக்கைகளை தனியார் உரிமையாளரிடம் ஒப்படைக்க அரசு எடுத்த நடவடிக்கையைக் கண்டிக்கிறார்.

இலங்கை போக்குவரத்துச் சபை மட்டக்களப்பு மாவட்டக் கந்தோரை மூடிவிட்டு பண்டாரவளையில் அமைத்துள்ளதை மீண்டும் மட்டக்களப்பில் நிறுவித் தரும்படி கேட்டுக்கொண்டார். கொழும்பு தெற்கு இரண்டாவது பிரதிநிதி திரு.பேனாட் சொய்ஸா பொருளாதாரத்தில் முன்னேறா விட்டால் இந்தநாடு பின்தள்ளி விடும் என்று கூறிய கருத்தை மறுத்து இராசமாணிக்கம் சமூக ஒற்றுமை இல்லா விட்டால் பொருளாதார முன்னேற்றத்தைக் காணமுடியாது என்று கருத்துரைத்தார். புரட்சிகள், யுத்தங்கள், உள்நாட்டு விவகாரங்கள், சமூக அதிருப்திகள் காணப்படும்போது ஒரு நாடு பொருளாதாரத்தில் குன்றியிருக்கும் என்பதை வரலாற்று நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. மக்களிடையே ஒற்றுமை இல்லாவிட்டால் நாடு முன்னேற முடியாதென்பதை இடதுசாரி, வலதுசாரி அரசியற் கொள்கைளை பின்பற்றுபவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

கனடா, ஐக்கிய அமெரிக்கா, தென்னாபிரிக்கா, இந்தியா, பாக்கிஸ்தான், செக்கோசெலவாக்கியா, ரஷ்யா போன்ற நாடுகளில் சமஷ்டி ஆட்சி முறை நிலவியது. இவை அரசியலமைப்பில் ஒரே கொள்கை கொண்டவை. இலங்கையில் $\frac{1}{3}$ பங்கினர் சிறுபான்மையினர். வேறு மொழியைப் பேசுபவர்கள். இவர்களை ஒற்றையாட்சியின் கீழ் திருப்திப்படுத்த முடியாது. மாறாக சமத்துவ ஆட்சியே சிறந்தது என்பதை எடுத்துக்காட்டினார். $\frac{1}{3}$ பங்கினரான தமிழ் பேசும் சமுதாயத்தின் ஒற்றுமை, நல்லெண்ணத்தை அரசாங்கம் பெறமுடியாவிட்டால் இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பெறமுடியாது என்றார்.

சிறுபான்மை மக்கள் தங்களின் உரிமைகளைப் பெறுவதற்கு

பலவகையான போராட்டங்களை நடத்துவார்கள். அக்காரணங்களுக்காக அவர்களைத் துவேசிகள், சமூகத் துரோகிகள் என்று கூறுவதில் அர்த்தமில்லை. நியூயோர்க் ஆளுனர் நெல்சன் நொக்பெல்லர் குறிப்பிட்ட சமஷ்டி ஆட்சி முறைக் கருத்துக்களை இராசமாணிக்கம் எடுத்துக்காட்டி ஆங்கிலத்தில் பேசினார். 1926 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்காவும் சமஷ்டி ஆட்சி முறை சிறந்தது எனக் கூறினார். ஐக்கிய இலங்கையை உருவாக்க மொழி சமய, சமூக, பிரதேச வேறுபாடுகளை தீர்த்து வேற்றுமையில் ஒற்றுமை காண சமஷ்டி ஆட்சி உகந்தது எனக் கூறி பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

## 4. முடிவுரை

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்று தமிழ், முஸ்லீம் ஆகிய தமிழ் பேசும் இனங்களை அரசியலில் இணைத்துச் செயலாற்றினார். 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றிபெற்ற பின்பு இராசமாணிக்கம் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் ''தமிழரும் முஸ்லீம்களும் இரு இனங்களானபோதும் எனது இரு கண்களைப் போன்றவர்கள்'' எனக் குறிப்பிட்டார். இராசமாணிக்கத்தின் தேர்தல் வெற்றியை முஸ்லீம்களின் வாக்குகளும் உறுதிப்படுத்தியது.

கட்சிக்கும், தமிழினத்துக்கும் உண்மையுடனும், துணிவுடனும் செயற்பட்ட ஒருவராக இராசமாணிக்கம் திகழ்ந்தார். இவரது இறப்பின்போது எஸ்.ஜே.வி.செல்வநாயகம்: ''விசுவாசமிக்க தலைவன் ஒருவனை இழந்துவிட்டேன்'' எனக் குறிப்பிட்டதிலிருந்து புலப்படுகின்றது. இவரது பணியின் சிறப்புக் காரணமாகவே திருவுருவச்சிலை வைத்துப் போற்றப்படுகின்றார்.

''ஆயுதப்போர் எவ்வித பிரச்சினைக்கும் தீர்வு காணமாட்டாது'' என திருமலை மாநாட்டில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கூறியதை ஏழாவது மாநாட்டு முன்னுரையில் இராசமாணிக்கம் ''பலாத்காரம் பலாத்காரத்தையே வளர்க்கும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

இராசதுரையின் விலகினேனா? விலக்கப்பட்டேனா? என்ற பாராளுமன்ற உரையில் ''ஒருவனுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைவிட கட்சியும், அதனைச் சார்ந்த பதவியுமே பெருமை தரும்'' என்ற கருத்தை வலியுறுத்துகின்றார். இத்தன்மையில் தமிழரசுக்கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பு மூன்று தடவைகள் இராசமாணிக்கத்திற்கு கிடைத்தமைக்கு இவரது தனிப்பட்ட ஆளுமையே காரணமெனலாம்.

1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றுக் கொண்ட காலப்பகுதியில் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட்டார். ஐக்கிய தேசியக்கட்சியின் களனி மாநாட்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து கட்சியிலிருந்து விலகிக்கொண்டார். அரசியல் சுயஇலாபம் கருதிச் செயற்படாமல், ஈழத்தமிழர் நலன்களைக் கருத்திற்கொண்டு தமிழரசுக்கட்சியுடன் இணைந்து தனது செயற்பாடுகளை இறுதிவரை முன்னெடுத்தவர்கள் வரிசையில் கிழக்குமண் சார்பாகப் போற்றப்படத்தக்கவர்.

தேர்தல் தோல்விகளைக் குறைந்த வாக்கு வித்தியாசத்திலும், தேர்தல் வெற்றிகளைக் கூடிய வாக்கு வித்தியாசத்திலும் இராசமாணிக்கம் பெற்றுக்கொண்டார். இறக்கும் வரை கொள்கைப் பிடிப்புள்ளவராகவும், கொள்கை தவறாதவராகவும் காணப்பட்டார். 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கா தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைத்தது. தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவு வழங்கியது. தமிழரசுக்கட்சியின் அமைச்சர் பதவிக்கு ஒருவரை சிபார்சு செய்து தரும்படிக் கேட்கப்பட்டது. தமிழரசுக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இராசமாணிக்கத்தின் பெயரை முன்மொழிந்தார். ஆனால் இராசமாணிக்கம், ''அமைச்சர் பதவியை மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஏற்கக்கூடாது'' எனக் குறிப்பிட்டார். இதனால் மு.திருச்செல்வம் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இலங்கையில் தமிழ்த் தேசியவாதத்தின் வளர்ச்சியில் இராசமாணிக்கத்திற்குப் பங்குண்டு. தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்றத்திற்கு வெளியேயான மக்கள்மயப்பட்ட போராட்டங்கள், பாராளுமன்றத்திற்கு உள்ளேயான மக்கள் பிரதிநிதிகள்மயப்பட்ட போராட்டங்கள் என்ற பிரதான இரு உத்திகள் மூலம் தமிழ்த் தேசியவாத வளர்ச்சியை ஏற்படுத்தியது. பாராளுமன்றத்திற்கு வெளியே முன்னெடுக்கப்பட்ட காலிமுகத்திடல் சத்தியாக்கிரகப் போராட்டம், சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம், திருமலை யாத்திரை, தமிழரசு தபால் முத்திரை வெளியீடு, ஒத்துழையாமைப் போராட்டங்கள், கறுப்புக்கொடிப் போராட்டங்கள் போன்றன தமிழ்மொழி பேசுவோரின் பிரச்சினைகளை வெளி உலகிற்கு கொண்டுவந்த அதேவேளை தமிழர்களை தமிழ்த் தேசியவாதம் என்ற ஒற்றை மையத்தில் அணிதிரள்வதற்குரிய சூழலை ஏற்படுத்தியது. இத்தகைய பணிகளில் இராசமாணிக்கத்திற்கும் முக்கிய பங்குண்டு. இதன் காரணமாகவே இராசமாணிக்கம் நெருக்கடிகளையும், தடுப்புக் காவல்களையும் எதிர்நோக்கினார்.

தேசிய உணர்வு 1949 இலிருந்து 1972 வரையான காலப்பகுதியில் மக்கள் மத்தியில் வலுவாகக் காணப்பட்டது. தமிழ்த் தலைவர்கள் தேசியவாத உணர்வைத் தட்டியெழுப்ப சுலோகங்கள் பலவற்றை மேடைகளில் பேசினர். அவ்வகையில், இராசமாணிக்கத்தினால் தமிழரசுக்கட்சியின் ஏழாவது மாநாட்டின் போது “என் தமிழே! தாயே!! எனை ஈந்தும் உனை நான் காப்பேன்!!!”, “அச்சம் என்பது மடமையடா! அஞ்சாமை திராவிடர் உடமையடா!” போன்ற வாசகங்கள் குறிப்பிடப்பட்டன.

மூன்று காலகட்டங்களில் மொத்தமாகப் பதினான்கு வருடங்கள் பட்டிருப்புத்தொகுதியை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய சி.மூ.இராசமாணிக்கம் அவர்கள் இருபத்திரெண்டு வருட காலம் முழுநேர அரசியல்வாதியாகச் செயற்பட்டு அத்தொகுதி மக்களால் மட்டுமல்லாது, முழு ஈழத்தமிழர்களினாலும் நேசிக்கப்பட்டவர். தமிழ்ச் சமூகம் பேரினவாதிகளால் அடக்கப்பட்டபோது அரசியலில் குதித்த அவர் இறுதிவரை தமிழ் மக்களின் நலனுக்காகப் போராடினார்.

**அடிக்குறிப்புக்கள்**

1. சபாரெத்தினம்.ரி., 2006, தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்லம், பக் 97
2. இலங்கை தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலர், வரலாற்றுக் கட்டுரை, 1974, இலங்கை தமிழரசுக்கட்சி வெளியீடு, சுன்னாகம், பக் 5
3. மனோகரன்.ஆ, 2008, இலங்கைத் தேசிய இன முரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும், வணிக வளாகம், பக் 12
4. நூற்றாண்டு மலர்க்குழு, 2013, இராசமாணிக்கம், கொள்கை அரசியலும் சி.மூ.இராசமாணிக்கனாரும், இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டக்கிளை, பக் 20
5. சபாரெத்தினம்.ரி., 2006, தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்லம், பக் 20
6. நூற்றாண்டு மலர்க்குழு, இராசமாணிக்கம், தமிழரசுக்கட்சியும் இராசமாணிக்கமும், 2013, இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டக்கிளை, பக் 36
7. மேலது, பக் 36, 37
8. நடேசன்.ஜி., 2000, இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு, அபிராமி நிறுவனம், பக் 46, 47
9. துண்டுப்பிரசுரம், மொழிப் பிரச்சினை பற்றிய மாபெரும் பொதுக் கூட்டம், 1956.01.28
10. நடேசன்.ஜி., 2000, இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு, அபிராமி நிறுவனம், பக் 52
11. நூற்றாண்டு மலர்க்குழு, 2013, இராசமாணிக்கம், சீ.மூ.இராசமாணிக்கம் அவர்களின் அரசியல் வழியும் சமூகப் பார்வையும், இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டக்கிளை, பக் 41, 42

12. சபாரெத்தினம்.ரி., 2006, தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்லம், பக் 200

13. சபாரெத்தினம்.ரி., 2006, தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்லம், பக் 191

14. மேலது, பக் 204

15. நூற்றாண்டு மலர்க்குழு, 2013, இராசமாணிக்கம், தமிழ் பேசும் மக்களின் பெருந் தலைவன் இராசமாணிக்கம், இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டக்கிளை, பக் 6

16. சபாரெத்தினம்.ரி., 2006, தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்லம், பக் 21

17. மேலது, பக் 226, 227

18. சபாரெத்தினம்.ரி., 2006, தந்தை செல்வாவின் அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்லம், பக் மேலது, பக் 291

19. மேலது, பக் 292

20. மேலது, பக் 296

## 5. உசாத்துணை


1. இராசதுரை.செ. (2008). சுவடுகள், பூமகள் பதிப்பகம், மட்டக்களப்பு.

2. சபாரெத்தினம்.ரி. (2006). தந்தை செல்வா : அரசியல் வாழ்க்கைச் சரிதை, குமரன் புத்தக இல்ல வெளியீடு, கொழும்பு - சென்னை.

3. சிற்றம்பலம்.சி., (2015). தடம் பதித்த தமிழ்த் தேசியம், நித்திலம் பதிப்பகம், மன்னார்.

4. நூற்றாண்டு மலர்க்குழு (2013). இராசமாணிக்கம் (இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னால் தலைவரும், பட்டிருப்புத் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்), இலங்கை தமிழரசுக்கட்சி மட்டக்களப்பு மாவட்டக்கிளை வெளியீடு, மட்டக்களப்பு.

5. இலங்கை தமிழரசுக்கட்சி பவளவிழா மலர் (2010). இலங்கை தமிழரசுக்கட்சி வெளியீடு, யாழ்ப்பாணம்.

6. இலங்கை தமிழரசுக்கட்சி வெள்ளிவிழா மலர் (1974). இலங்கை தமிழரசுக்கட்சி வெளியீடு, சுன்னாகம், யாழ்ப்பாணம்.